## அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்குரிய பதவிகளுக்கு நியமித்தல் - 2021

கட்டம் கட்டமாக வேலையற்ற பட்டதாரிகளுக்குப் பயிற்சியளித்தல் என்ற தலைப்பில் 2018.05.25 ஆம் திகதிய 18/1113/805/019 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு கிடைத்த 2018.05.30 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கும் அதன் நேரெதிர் விளைவாக 2019.08.01மற்றும் 2019.09.16 ஆம் திகதிய பயிலுநர் பயிற்சிக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள், 2020.10.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானம், 2012.02.14 ஆம் திகதிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகள், அரச சேவை ஆணைக்குழுச் செயலாளரின் 2020.11.12, 2021.01.09 ஆம் திகதிய கடிதங்கள் மூலமான அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி என்பவற்றுக்கு இணங்க 2019.08.01 மற்றும் 2019.09.16 ஆம் திகதிய பயிலுநர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள், 2021.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமிக்கப்படுகிறார்கள். அதற்கிணங்க, இந்த உத்தியோகத்தர்களின் நியமனக் கடிதங்களையும் சேவையில் இணைக்கப்படும் நிறுவனங்களின் தலைவர்களுக்கான பிரதிகளையும் அவ்வாறு சேவையில் இணைக்கப்படும் நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2021.03.24 ஆம் திகதி நண்பகல் 12 மணி முதல் பின்வரும் இணைப்புக்களின் ஊடாக பிரவேசித்து உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்களை அறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பமளிக்கப்படும். (இதற்காக இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள பயனர் பெயரையும் (user name) கடவுச்சொல்லையும் (password) பயன்படுத்துங்கள்

- 43.224.125.68.7006
- 43.224.125.68.7003
- 43.224.125.68.7000
- 43.224.125.68.7007

அதனடிப்படையில், அந்த உத்தியோகத்தர்கள் 2021.04.01 ஆம் திகதி முதல் 2021.04.09 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் குறித்த நிறுவனத் தலைவர்களிடம் சமுகமளித்து **கடமையைப் பொறுப்பேற்று** தமது நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 2021.04.09 ஆம் திகதியின் பின்னர் கடமைக்குச் சமுகமளிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் வினவி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## சேவையில் இணைக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள்

ஆணைக்குழுக்களில்/ அமைச்சுக்களில்/ திணைக்களங்களில் நிலவும் வெற்றிடங்களைக் கவனத்தில் எடுத்து அந்நிறுவனங்களின் தலைவர்களின் பரிந்துரைகள், உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட சிரமங்கள் போன்றவை தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தி உத்தியோகத்தர்கள் சேவை நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். நியமனக் கடிதத்தில் உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அமைச்சின் அல்லது திணைக்களத்தின் பெயர் மாத்திரமே குறிப்பிடப்பட்டிருக்கும்.

- உரிய நிறுவனத்தில் கடமைக்குச் சமுகமளித்து கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் அந்த உத்தியோகத்தர்களை தலைமையகங்களிலும் பிரதேச அலுவலகங்களிலும்/ பிரதேச செயலகங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு சேவையில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- மாகாண அரச சேவைக்கு நியமனம் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்த/ நிறுவனத் தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்ட அரசாங்க சேவை நிறுவனங்களில் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் உரியவாறு மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படுவதுடன் அந்த உத்தியோகத்தர்களை இணைந்த சேவையின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படாது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## சம்பளங்கள் செலுத்துதல்

*மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அரசாங்க சேவைக்கான சம்பளங்கள் செலுத்தும் முறை மற்றும் உத்தியோகத்தர்கள் 2021.04.01 ஆம் திகதி முதல் புதிய சேவை நிலையங்களுக்குச் சமுகமளிக்கின்றமை என்பவற்றைக் கவனத்தில் எடுத்து இந்த உத்தியோகத்தர்களுக்குப் பின்வரும் விதத்தில் சம்பளங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.*

*நிரந்தர நியமனம் பெறும் பயிலுநர் பட்டதாரிகளுக்கு வழங்கப்படும் ரூபா: 20,000/= கொடுப்பனவை 2021 மார்ச் மாதத்திற்கும் செலுத்துவதற்கு நிதி ஏற்பாடுகளை விடுவிப்பதற்கு அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் தாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கிணங்க பயிலுநர்களுக்கான மார்ச் மாதக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு முன்னைய சேவை நிலையத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.*

*2021.04.09 ஆம் திகதியாகும் போது உத்தியோகத்தர்கள் கடமையைப் பொறுப்பேற்கும் செயற்பாடு பூர்த்தியடைவதுடன் ஏப்ரல் மாதம் முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இல் நிறுவி சம்பளங்களைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றன. அதன் போது 2021.01.01 ஆம் திகதியை நிரந்தர நியமனத் திகதியாகக் கருதி சம்பளங்களைத் தயாரித்தல் வேண்டும்.*

*புதிய சேவை நிலையத்திற்குச் சமுகளிக்கும் உத்தியோகத்தர்கள் பின்வரும் ஆவணங்களை தாமதமின்றி நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைப்பார்களாயின், சம்பளங்களைத் தயாரித்துச் செலுத்துவதற்கு இலகுவாக அமையும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.*

1. *2021.01.01 ஆம் திகதி முதல் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்கும் திகதி வரை ரூபா: 20,000/= கொடுப்பனவு செலுத்தியதை உறுதிப்படுத்தி நிறுவனத் தலைவரினால் வழங்கப்படும் கடிதம்*

   *(படிவம் 1)*

2. *2021.01.01 திகதி முதல் புதிய சேவை நிலையத்தில் கடமையைப் பொறுப்பேற்கும் திகதி வரையான லீவு விபரங்கள்*

## சேவை நிலையங்களை மாற்றுதல்

*இந்த உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2021.01.05 ஆம் திகதியைக் கொண்டதாக கிடைக்கப் பெற்றதன் பின்னர் கொவிட் நிலைமையின் காரணமாக பல்வேறு மட்டுப்படுத்தல்களுக்கு மத்தியில் அரச அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. ஜே.ஜே. ரத்னசிரி அவர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலின் கீழ் இந்த உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் நியமிப்பதற்காக அரச சேவையில் நிலவும் தேவைகளையும் அடையாளம் கண்டு அரச சேவை ஆணைக்குழு, முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், மாகாண சபைகள் போன்ற நிறுவனங்களின் அனுமதிகளையும் ஒப்புதல்களையும் பெற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தகவல் தொழில்நுட்ப தீர்வொன்றின் உதவியுடன் (IT Solution) உத்தியோகத்தர்களின் இற்றைப்படுத்திய தகவல்களை கோருவது முதல் ஒரு குறுகிய காலப் பகுதியில் அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான சபைகளை நடாத்தி அடையாளம் காணப்பட்ட சேவை நிலையங்களில் சேவையில் இணைத்து 10,000 இற்கும் மேற்பட்ட நிரந்தர நியமனங்களை வழங்க முடிந்தது.*

*இதன் போது பிரதேச அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களைக் கவனத்தில் எடுத்த அமைச்சுக்களுக்கு/ திணைக்களங்களுக்கு உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். அதனால், உத்தியோகத்தர்கள் சேவையில் அமர்த்தப்பட்ட சேவை நிலையங்களை மிக விசேடமான காரணங்களுக்காகவன்றி மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பது வலியுறுப்படுகின்றது. அதற்கிணங்க உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்ட சேவை நிலையங்களை அறிந்து கொண்ட சந்தர்ப்பத்திலிருந்து முன்வைக்கப்படும் எந்தவொரு கோரிக்கையும் பொறுப்பேற்கப்படமாட்டாது.*

ஏதேனும் விசேட காரணமொன்றிற்காக சேவை நிலையத்தை மாற்ற வேண்டுமாயின் பின்வரும் விதத்தில் செயற்படுதல் வேண்டும்.

1. 2021.04.01 ஆம் திகதி புதிய சேவை நிலையத்திற்குச் சமுகமளித்து உரிய திணைக்களத் தலைவரிடம் கடமைகளைப் பொறுப்பேற்றல்.

2. நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்ளல்.

3. இடமாற்றக் கோரிக்கையை திணைக்களத் தலைவரின் ஊடாக இணைய வழியில் சமர்ப்பித்தல்.

❖ அது தொடர்பில் பின்பற்ற வேண்டிய செயலொழுங்கள் தொடர்பில் நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதனால், 2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகள் இந்த அமைச்சுக்கு வருகை தந்து சமர்ப்பிக்கும் எந்தவொரு தனிப்பட்ட இடமாற்றக் கோரிக்கை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என அறிவிக்கப்படுகின்றது.

**எஸ். ஆலோக பண்டார**
இணைந்த சேவை பணிப்பாளர் நாயகம்

*(படிவம் 1)*

*எனது இலக்கம் : ............................................*
*திகதி : ............................................*

...........................................................

..........................................................
*(நிரந்தர நியமனம் கிடைத்துள்ள நிறுவனத்தின் முகவரி)*

**<u>பயிலுநர் பட்டதாரிகளுக்கான கொடுப்பனவு வழங்குதல்</u>**

*பட்டதாரிப் பயிலுநர் பயிற்சி உத்தியோகத்தராக இந்த.................................................... (நிறுவனம்) இல் சேவையாற்றிய திரு/திருமதி/செல்வி ........................................................................................ என்பவருக்கு பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு ரூபா 20,000/- மாத்திரம் 2021 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையில் பின்வரும் விதத்தில் செலுத்தப்பட்டுள்ளது.*

| மாதம் | கொடுப்பனவு |
|---|---|
| ஜனவரி | |
| பெப்ரவரி | |
| மார்ச் | |

.......................................
*(கணக்காளர்)*